**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் - கூறு - I - 2014**

-----------------------------------------------------------------------------------------------------------

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் - கூறு - I இன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

-----------------------------------------------------------------------------------------------------------

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தேசிய மட்டத்திலும் உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சு மாகாண மட்டத்திலும் அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் 2013 -2017 வரையான காலத்திற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி திட்டத்தை அமுலாக்குவதற்கு நிதி உதவி வழங்குவதற்கு இரண்டாவது சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டம் அமுலாக்கப்பட்டது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொடர்பில்லா தொற்றுநோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கு உறுதிப்படுத்தலிற்காக பொது மக்கள் சுகாதாரத்தின் செயலாற்றலின் நியமத்தை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் கூறு - I இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 190 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 123.3 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகப் பட்டியலப்படுத்தப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மீதான கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------------------

சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் முடிவடைந்த ஒதுக்கீட்டு கணக்குகளின் பூர்த்தியாக்கலிலிருந்த ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நியாயபூர்வமாகத் தயாரித்து சமர்ப்பிப்பதும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை தயாரிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியிடல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

## 2.1. அபிப்பிராயம்

---------------------

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தால் பேணப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம், கடனின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அமெ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அமெ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அமெ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ கூறு-1 | 190 | 24,768.4 | 1,257 | 7.58 | 988.29 | 13.58 | 1,769.79 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்ட கூறு – I இன் கீழ் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 5,733 மில்லியனுக்கு சமனான யூ.எஸ் டொலர் 43.75 மில்லியன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 988.29 மில்லியனுக்கு சமனான யூ.எஸ் டொலர் 7.58 மில்லியன் பெறுகைகள் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து மீளாய்வாண்டின் போது பெறப்பட்டது.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட கூறு – I இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 24,768.4 மில்லியனுக்கு சமனான யூ.எஸ் டொலர் 190 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 07 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1,769.79 மில்லியனுக்கு சமனான யூ.எஸ் டொலர் 13.58 மில்லியன் மாத்திரமே 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே மீதமுள்ள செயற்திட்டத்தின் நான்கு ஆண்டு காலப்பகுதியின் போது முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தும் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(இ) திரிபோசா நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதன மற்றும் மீண்டுவரும் கிரயத்தினை ஈடுசெற்வதற்காக செயற்திட்டத்தினால் ரூபா 50 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10.64 மில்லியன் தொகை மாத்திரமே ஏற்பட்டிருந்தது.

**3.3 பௌதீக முன்னேற்றம்**

செயற்திட்ட உபகூறு – I இன் கீழ் அடையப்படவேண்டிய பௌதீக இலக்குகள் 03 மீளளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் அடிப்படையில் இருக்கின்றன. அத்தகைய மீளளிப்பு இணைப்பு குறிகாட்டிகளுடன் தொடர்புடைய பௌதீக இலக்குகளின் அடைதலின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உள்ளக ஆரோக்கியமற்ற இறப்பு திரும்பல் முறைமையை ஸ்தாபிப்பதற்காக ரூபா 21 மில்லியன் தொகை ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 4.93 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்திற்காக பெறப்பட்டிருந்தது. அந்த தொகையில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3.37 மில்லியன் தொகை 12 வைத்தியசாலைகளின் முறைமைகளுக்காக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திருப்பப்பட்டிருந்ததுடன் 10 வைத்தியசாலைகளால் ரூபா 2.48 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த முறைமையின் அமுலாக்கலின் பௌதீக முன்னேற்றத்துடன் தொடர்புடைய எத்தகைய சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) அமைச்சு மீளாய்வாண்டின் போது 28 வைத்தியசாலைகளில் ஆரோக்கிய பராமரிப்பு தரம் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளை ஸ்தாபிப்பதற்காக ரூபா 17.23 மில்லியன் தொகையை செலவழித்திருந்ததுடன் அதன்மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- அத்தகைய பிரிவின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு 2014 திசெம்பர் 31 இலும் 15 வைத்தியசாலைகளிடமிருந்து சான்றுகள் கிடைத்திருக்கவில்லை.

- கொழும்பில் டி சொய்சா வைத்தியசாலை, கண்டியில் பயிற்சி வைத்தியசாலைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.12 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தகைய பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு வைத்தியசாலை அதிகாரசபைகளால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அது வெளிப்படுத்தியது.

- அத்தகைய பிரிவுகளிற்காக அமைச்சால் ரூபா 5.60 மில்லியன் கிரயத்தில் கணனிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் குருநாகலிலுள்ள அடிப்படை வைத்தியசாலைகளின் அதிகாரிகளால் அத்தகைய சொத்துக்கள் வைத்தியசாலைகளுக்கு தேவையற்றதாக குறிப்பிட்டு அத்தகைய உபகரணங்கள் நிராகரிக்கப்பட்டது என கணக்காய்வில் வெளிப்படுத்தியிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது மீளளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் - 05 இன் கீழ் 1,743 கர்ப்பிணி மற்றும் சிறுவர் சுகாதார பரிசோதனைகள் நடாத்தப்பட எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அத்தகைய 1,627 சோதனைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

3.4 **ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சானது 2013 திசெம்பர் 03 அளவில் ரூபா 3,197 மில்லியனுக்கு சமனான யூ.எஸ் டொலர் 24 மில்லியன் கிரயத்தில் 14 முவ்வழி சக்தி நேரியல் வேகமூட்டிகளை வழங்குவதற்காக வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு ஒப்பந்தமொன்றை

வழங்கியிருந்தது. எனினும் ஒரு வேகமூட்டி மாத்திரமே 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தது. மேலும், வழங்கல் அட்டவணையின் பிரகாரம், 2015 மார்ச் 31 இற்கு முன்னர் வழங்கப்பட வேண்டியிருந்த 08 வேகமூட்டிகள் 2015 ஆகஸ்ட் 31 இலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,754 மில்லியனுக்கு சமனான யூ.எஸ் டொலர் 20 மில்லியன் கிரயத்தில் ஏனைய 17 நேரியல் வேகமூட்டிகளை கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களை தெரிவு செய்வதற்காக அரசாங்க கொள்வனவு செயன்முறை பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. வழங்கல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்குநரால் முறையான உடன்படிக்கை 2014 திசெம்பர் 31 இலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது தம்புற்றேகமவிலுள்ள அடிப்படை வைத்தியசாலையின் பாவனைக்காக ஒரு உள்நோக்கு இயந்திரம் வைத்தியசாலையால் வேண்டப்பட்டிராத போதும் அத்தகைய இயந்திரம் ரூபா 11.41 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் குறைந்த மனு விலையான ரூபா 9.84 மில்லியன் தொகையை விட ரூபா 11.42 மில்லியன் அதிகூடிய மனுவிலையினை வழங்கிய வழங்குநரை தகுந்த காரணம் இல்லாமல் தெரிவு செய்திருந்தது.

3.5 <u>செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் பயன்படுத்திய நிதிகள்</u>

கடன் பெறுகைகளில் ரூபா 508.33 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் மீளளிப்பு இணைப்பு குறிகாட்டிகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பெறுகைகளில் செலவழித்த ரூபா 2,217 மில்லியன் தொகை குறித்த மீளளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை எதிர்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.